

# “நவீனச் சிந்தனைதான் திராவிடப் பொருளாதாரத்தின் அடிப்படை!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஐந்தாவது அமர்வில், ‘திராவிடப் பொருளாதாரத்தின் திசைவழி’ என்ற தலைப்பில், கழக செய்தித் தொடர்புக்குழு துணைச்செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆற்றிய உரை :**



**சூர்யா கிருஷ்ணமூர்த்தி**

**கழக செய்தித் தொடர்புக்குழு துணைச்செயலாளர்**

*“பொருளாதாரம் குறித்த திராவிட இயக்கத்தின் பார்வை என்ன? திராவிட இயக்கத்தின் பொருளாதாரப் பார்வை மரபான பழமைவாதப் பார்வையா, நவீனப் பார்வையா?*

**நவீனப்பார்வை**

காந்திய பொருளாதாரப் பார்வையை எடுத்துக்கொண்டால் அவர் ‘கிராமங்கள் எல்லாம் கிராமங்களாகவே இருக்க வேண்டும்’ என்றார். ‘கிராம சுயராஜ்யம் வேண்டும்’ என்று கேட்டார். ராட்டையை முன்னிறுத்திய அவர், இயந்திரங்களை மறுத்தார். ஆனால், இந்த இடத்தில் திராவிட இயக்கம் மாறுபடுகிறது. ‘பழமையை விட்டொழித்துவிட்டு, புதியவற்றை நோக்கி நகர்வோம், உலகத்தில் எதுவெல்லாம் புதிதாக





வருகிறதோ, அவை எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வோம்’. இதுதான் திராவிட இயக்கத்தின் அடிப்படைப் பார்வை.

அதனால்தான் 1970-களில் கம்ப்யூட்டர் வந்தபோது தந்தை பெரியார் தள்ளாத வயதிலும் கம்ப்யூட்டரைப் பார்க்கச் சென்றார். நம்முடைய முதலமைச்சர் துபாய் சென்றபோது ஃபியூச்சர் மியூசியத்தைப் பார்க்கிறார், அமெரிக்கா சென்றிருந்தபோது ஆளில்லாத வாகனங்களில் பயணிக்கிறார். அதற்கு என்ன அர்த்தம் என்றால், இன்றைக்கு இந்தியாவில் இல்லாத தொழில் நுட்பத்தைக்கூட அறிந்துகொண்டு செயல் படுத்தக்கூடிய உத்வேகத்தை இந்த நாட்டுக்கு கொடுக்கக்கூடிய தலைவராக நம் தலைவர் இருக்கிறார் என்பதுதான். இந்த நவீனப் பார்வை பெரியார், அண்ணா, கலைஞரிடம் இருந்து வருகிறது.

**வேளாண் வளர்ச்சி**

விவசாயம் நவீனமாக வேண்டும் என்று தொடர்ந்து திராவிட முன்னேற்றக்கழகம் வலியுறுத்தியது. 1958-இல் பேரறிஞர் அண்ணா ‘உழவுத் தொழிலுக்கு கருவிகளை அறிமுகப்படுத்துவது குறித்து, இந்த அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது?’ என்று சட்டமன்றத்தில் கேட்டார். ‘பாலாற்றுப் பகுதியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் எப்படியாவது பம்புசெட் மூலம் விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்கு திட்டங்களை வகுக்க வேண்டும்’ என்று அன்றைய அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்தார்.

**தொழில் வளர்ச்சி**

தமிழ்நாட்டில் சேலம் உருக்காலைக்காக 15 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் போராடியது. ஏதோ சேலத்தில் முச்சந்தியில் நின்று போராடவில்லை. தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசினோம்; நாடாளுமன்றத்தில் பேசினோம், அத்தோடு நிற்காமல், 1968-இல் முதலமைச்சராக ஜப்பானுக்குப் பயணப்பட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா, ‘இந்திய அரசாங்கத்திற்கு சேலத்திலே உருக்காலை அமைப்பதற்கு நீங்கள் உதவ வேண்டும்’ என்று ஜப்பான் அரசிடம் கோரிக்கை வைத்தார். இப்படி தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி குறித்து எப்போதும் அக்கறை கொண்டிருந்தோம்.

1946-இல் தன்னுடைய தம்பிகளுக்கு எழுதிய கடிதத்தில் அண்ணா வங்கிகள் பற்றி விளக்குகிறார்.’ இன்றைக்கு தொழில் துறையில் வட இந்தியாதான் கோலோச்சுகிறது, நமக்கெல்லாம் ஒன்றுமே இல்லை என்று வருத்தப்படுகிறாயே, ஏன்? ஏனென்றால் நம் தொழிலுக்கு முதலீட்டை அளிக்கக்கூடிய வங்கிகள் எல்லாம் வடவர்கள் கையில் இருக்கிறது. நம்மிடம் யோசனை, திறமை, துணிச்சல் இருக்கலாம் மூலதனத்தை அளிப்பதற்கு வங்கிகள் இல்லை’ என்று சொல்கிறார். அந்தக் கவலைதான் 1970-களில் இந்திரா காந்தி அம்மையாருக்கு நெருக்கடி கொடுத்து, வங்கிகளை தேசியமயமாக்குவதற்காக முத்தமிழறிஞர் கலைஞரை உந்தித் தள்ளியது. இவை எல்லாம் ஏதோ ஒரு இரவில் நடந்துவிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் தத்துவத்தை, இயக்கத்தை, இந்த இனத்தை செதுக்கியிருக்கிறோம். அதுதான் நம்முடைய பெருமை.

இயந்திரங்களுக்கு அனுமதி, வங்கிகளைத் தேசியமயமாக்கு, தொழில்களை ஊக்குவி- இந்தத் தத்துவம்தான் திராவிட இயக்கத்தின் அடிப்படை பொருளாதார பார்வையாக இருந்திருக்கிறதே தவிர, நாம் ஒரு நாளும் பின்னோக்கி சிந்தித்தவர்கள் அல்ல. மரபுக்குள் சிக்கிக்கொண்டு பிற்போக்குவாதிகளாக நாம் இருந்ததே கிடையாது.

**சமூக முதலீடு**

ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை என்பது முதலீடு. ‘இவ்வளவு முதலீடு செய்தால் எவ்வளவு லாபம் கிடைக்கும்?’ - இதுதான் அடிப்படையான பொருளாதார எதிர்பார்ப்பு.

திராவிட இயக்கமும் தொடர்ச்சியான முதலீடுகளைச் செய்துகொண்டே இருந்தது. ஒரு குழந்தை பிறக்கிறது. அதற்கான மருத்துவமனை ஒரு முதலீடு. அந்த குழந்தைக்கு ஊசி போடுகிறோம், மருத்துவர், ஊட்டச்சத்து அது ஒரு முதலீடு. அந்த தாய்க்கு பிரசவ காலத்தில் நிதியுதவி செய்கிறோம் அது ஒரு முதலீடு. அந்த குழந்தை பள்ளிக்குச் செல்கிறது, பள்ளிக்கூடம் கட்டுகிறோம், ஆசிரியர்களை நியமித்துள்ளோம் அது ஒரு முதலீடு. அதன்பிறகு அந்தக் குழந்தைக்கு பள்ளி சீருடையிலிருந்து, காலில் போடும் செருப்பு, சாப்பாடு என எல்லாவற்றையும் கொடுக்கிறோம், அது ஒரு முதலீடு. அடுத்து அந்த குழந்தை கல்லூரிக்கு வருகிறது. கல்லூரிக்கு வரும்பொழுது அந்தக் குழந்தைக்கு முதல் தலைமுறை பட்டதாரியாக இருந்தால், கட்டணச் சலுகை அது ஒரு முதலீடு, இப்படி முதலீடுகளை செய்துகொண்டே வருகிறோம்.

அடுத்து தலையீடுகள். ஒரு குழந்தை கல்லூரிக்கு வருகிறது என்றால், பிற்படுத்தப்பட்ட சமூகமா, பட்டியல் இனமா, பழங்குடியினமா என்பதைப் பார்த்து இட ஒதுக்கீடு கொடு. அது ஒரு தலையீடு. அந்தக் குழந்தை கல்லூரியில் படிக்கும்போது திறனை வளர்ப்பதற்கு ‘நான் முதல்வன்’ திட்டம் கொண்டு வந்திருக்கிறோம், அது ஒரு தலையீடு. அப்போது ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து, வேலைக்குச் செல்கிற வரை இந்த அரசாங்கம் ஒரு பத்து, பதினைந்து திட்டங்களின் மூலமாக முதலீடுகளையும், ஐந்தாறு திட்டங்களின் மூலமாக தலையீடுகளையும் செய்கிறது. இந்த முதலீடும் தலையீடும், நன்றாக சம்பாதிக்கக் கூடிய திறனுள்ள ஆளுமையாக அந்தக் குழந்தையை சமூகத்துக்கு உருவாக்கித் தருகிறது.

**திரும்பப்பெறுதல்**

அந்தப் பிள்ளை வளர்ந்து சம்பாதிக்கிறான்… சம்பாதித்தபிறகு சம்பாதிப்பதற்கு ஒரு வரி கட்டுகிறான். செலவு செய்கிறான். செலவு செய்வதற்கு ஒரு வரி கட்டுகிறான். அதை எங்கேயாவது சேமித்து வைக்கிறார்கள் அல்லது முதலீடு செய்கிறார்கள். அந்த முதலீட்டில் வரக்கூடிய லாபத்துக்கு ஒரு வரி கட்டுகிறார்கள்.

சாதாரண குடிசையில் பிறந்த ஒரு குழந்தைக்கு, 20 வருடம் இந்த அரசாங்கம் செய்யக்கூடிய முதலீடுகளும், தலையீடுகளும் அடுத்த 80 வருடம் அந்த குழந்தையிடம் இருந்து அரசுக்குத் திரும்ப வருகிறது. இதுதான் சமூக முதலீடு. இந்த சமூக முதலீட்டைத் திட்டமிட்டு செயல்படுத்திய ஒரே இயக்கம், இந்த நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் மட்டும்தான்.

**சமூகச்சிந்தனை**

‘காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு’ புத்தகத்தில் தி.மு.க.வின் பங்களிப்புகளை நான்கு தலைப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள். அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம். இந்த அரசியல், சமூகம், பண்பாடு, இந்த மூன்றிலும் நாம் செய்த தலையீடு, முதலீடு இதுதான் விளைவாக, பரிசாக பொருளாதாரத்தில் நமக்குத் திரும்புகிறது.

இந்தியாவில் எந்த மாநிலமும் சாதிக்காத வகையில் நான்காண்டு காலத்தில் 10 லட்சம் கோடிக்கு அந்நிய நேரடி முதலீட்டைக் கொண்டு வந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு, ஒரே ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. இந்தியாவில் எந்த மாநிலமும் வளராத அளவிற்கு 11.19 சதவிகித வளர்ச்சியை அடைந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு, ஒரே அரசு திராவிட மாடல் அரசு. இவை எல்லாவற்றுக்கும் காரணமாக இருந்தது தி.மு.க.வின் சமூகப்பார்வையுடன் கூடிய பொருளாதாரப் பார்வை.”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அமெரிக்காவில் Dravidian Polsoc என்ற அமைப்பு நடத்தும் ‘குறிஞ்சிப்பூ’ இதழில் வெளியான ‘முற்போக்கு புத்தகக்காட்சி ஏன் தமிழ்ச்சமூகத்துக்கு இன்றியமையாதது?’ என்ற கட்டுரையில் இருந்து…**

‘நவம்பர் 8-16, 2025-இல் முத்தமிழறிஞர் பதிப்பகத்தால் ‘முற்போக்கு புத்தகக்காட்சி’ நடத்தப்பட்டது. இது சென்னை மற்றும் மற்ற மாவட்டங்களில் நடக்கும் வழக்கமான புத்தக் காட்சியில் இருந்து வேறுபட்டது. பபாசி அமைப் பால் நடத்தப்படும் சென்னை புத்தகக்காட்சியில் பாரதி புத்தகாலயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், நீலம் பப்ளிகேஷன்ஸ் போன்ற முற்போக்கு பதிப்பகங்கள் அரங்குகளை அமைக்கும் அதேவேளை சாதியம், பாலின சமத்துவமின்மை, பகுத்தறிவுக்கு எதிரான, சனாதனத்தை வலியுறுத்தும் பதிப்பகங்களின் புத்தகங்களும் இடம்பெற்றிருக்கும். ஆனால், தமிழ்நாட்டு இளைஞர்கள் அரசியல் கருத்தியல்களை அறிய அரசியல் மற்றும் சமூக மாற்றங்களை வலியுறுத்தும் பதிப்பகங்களுக்கான தனிவெளி தேவை.

முற்போக்கு புத்தகக்காட்சிக்குச் சென்று பார்வையிட்டபோது, சென்னை வரலாறு, மாநில சுயாட்சி உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்த அற்புதமான புத்தகங்கள் இருந்தன. திராவிடக் கருத்தியல், தி.மு.க. வரலாறு மட்டுமல்லாது பல்வேறு முற்போக்குப் புத்தகங்களும் இடம் பெற்றிருந்தன. குறிப்பாக சாதி ஒழிப்பு, வர்க்கப்போராட்டம், திருநர் உரிமை ஆகியவை குறித்த புத்தகங்கள் இடம்பெற்றிருந்தது வரவேற்கத்தக்கது.’